# சமுர்த்தி திட்ட அமுலாக்கத்தில் வீதி மட்டபணியகத்தினரின் வகிபங்கு: விஷேட ஆய்வு கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகப்பிரிவு

**Meeza Bagum, MM***

**ஆய்வுச் சுருக்கம்**

மூன்றாம் உலக நாடுகளில் வறுமை ஒழிப்பு என்பது மிகச் சவாலான ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. இதற்காக ஒவ்வொரு அரசும் காலத்திற்குக் காலம் பலவிதமான வறுமை ஒழிப்புக் கொள்கைகளை உருவாக்கி செயற்படுத்தி வருகின்றது. இந்தவகையில் இலங்கை அரசும் ஜனசக்தி அதனைத் தொடர்ந்து சமூர்த்தி போன்ற பல வறுமை ஒழிப்புக் கொள்கைகளை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு உருவாக்கி பணியகவமைப்பு மூலம் அமுல்படுத்தி வருகின்றது. ஒரு சிறப்பான கொள்கை அமுலாக்கத்தில் மக்கள் துறை ஊழியர்களான வீதி மட்டபணியகத்தினரின் வகிபங்கு முக்கியமானதாகும். இலங்கை அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் சமூர்த்தி வறுமை ஒழிப்புத் திட்ட அமுலாக்கம் முழுமையான அளவில் இடம்பெறாமைக்கு வீதி மட்டபணியகத்தினரின் வகிபங்கில் காணப்படும் குறைபாடு குறிப்பிடத்தக்கது. ஆகவே, சமூர்த்தி திட்ட அமுலாக்கத்தில் இவ் வீதிமட்ட பணியகவமைப்பினரின் வகிபங்கு மற்றும் செயற்பாடு எவ்வாறு உள்ளது என்பதனை கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகத்தை மையமாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்கான தகவல்கள் முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை மூலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. முதலாம் நிலை தரவில் வினாக்கொத்து (Questionnaire), பேட்டி காணல் (Interview), இலக்குக் குழு கலந்துரையாடல் (Focus Group Discussion - FGD) போன்றவை அடங்குகின்றன. இரண்டாம் நிலைத் தரவில் முக்கியமாக பிரதேச செயலக அறிக்கைகள், சமூர்த்தி நிகழ்ச்சித் திட்ட அறிக்கைகள், ஏனைய மூலகங்கள் அடங்குகின்றன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் எண்ணளவான முறை (Quantitative method) மற்றும் பண்புசார் முறை (Qualitative method) என்வற்றின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. பெறப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்ததில் இருந்து கல்முனை பிரதேச செயலக முஸ்லிம் பிரிவில் சமூர்த்தி திட்ட அமுலாக்கத்தில் வீதிமட்ட பணியகவமைப்பினரின் வகிபங்கு சிறப்பாகக் காணப்பட்டாலும் சமூர்த்தி திட்ட அமுலாக்கம் முழுமையான ஒன்றாக இன்மைக்கு சமூர்த்தி திட்டத்திற்கான உதவிகள் அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கப்பெருவதில் உள்ள தாமதம், மக்களின் விழிப்புணர்வின்மை மற்றும் நவீன வசதியின்மை போன்ற காரணிகள் அடையாளம் காணப்பட்டது.

**பிரதான சொற்கள்:** வீதி மட்டபணியகவமைப்பினர், சமூர்த்தி திட்டம், வறுமை ஒழிப்பு

To whom correspondence should be addressed: meezabgm@gmail.com

*Department of Political Science, South Eastern University of Sri Lanka.